தெல்லிப்பழை ... [stamp]


# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 86 பிரசோற்பத்தி மாசி 09 (21 02 1992) வெள்ளி


★ கிழக்கு மாகாணத்தில்

## முழுப்பலத்துடன் புலிகள் செயற்படாது இருக்கின்றனர்!

- கேணல் சரத்முனசிங்க

கிழக்கு மாகாணத்தில் முழுப்பலத்துடன் செயற்படாது இருக்கும் திட்டத்தையே இப்போது விடுதலைப்புலிகள் கடைப்பிடிக்கின்றனர் என நேற்று செய்தியாளர் மாநாட்டில் இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க தெரிவித்தார். கிழக்கு மாகாணத்தில் சுமார் 600 புலி போராளிகள் உள்ளதாகவும் இவர்கள் அம்மாகாணம் முழுவதும் பரவலாக இருப்பதாகவும் முனசிங்க மேலும் தெரிவித்தார்.

# மான்தீவு இராணுவம் மீது கடற்புலி அதிரடித் தாக்குதல்

## படையினரின் 4 சடலங்கள், ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

யாழ் கடல் நீரேரிப் பகுதியில் கல்முனைக்கருகில் அமைந்துள்ள மான்தீவில் தங்கியிருந்த இராணுவத்தினர் நேற்று அதிகாலை கடற்புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கிலக்கானர் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரில் நான்கு பேரின் சடலங்களை கடற்புலிகள் கைப்பற்றினர்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் மான்தீவில் தங்கியிருந்த படையினர் மீது கடற்புலிகள் திடீர் எனத் தாக்குதலை நடத்தினர்

சில நிமிடத் தாக்குதலில் 7 படையினர் கொல்லப்பட்டதாகவும் இவர்களில் நான்கு பேரின் சடலங்களை புலிகள் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மான்தீவு தாக்குதலில்படையினரின் சில ஆயுதங்களும் கடற்புலிகளால் கைப்பற்றப் பட்டன. 07, 47

## குருநகரில் பார்வைக்கு

மான்தீவில் நேற்று அதிகாலை கடற்புலிகளின் விசேட பிரிவினால் நடத்தப்பட்ட அதிரடித்தாக்குதலில் உயிரிழந்த நான்கு இராணுவத்தினரின் சடலங்களும், ஆயுதங்களும் குருநகரிலுள்ள கடற்புலிகள்பிரதேசக்காரியாலயத்தில் நேற்றுக் காலையிலிருந்து நண்பகல் வரையில் வைக்கப்பட்டிருந்தன.

சடலங்களையும். ஆயுதங்களையும்பெருந் திரளான மக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## அவசரகாலச்சட்டம் 71 வாக்குகளால் நிறைவேறியது

பாராளுமன்றத்தில் நேற்று அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலம் நீடிப்பதற்கு ஆதரவாக 119 வாக்குகளும் 48 எதிரான வாக்குகளும் கிடைத்தன

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மான்தீவு படையினர் மீது கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

- ★ ஏ. கே. எல். எம். ஜி - 1
- ★ ரி - 56 துப்பாக்கிகள் - 6
- ★ ரி - 56 மகஸீன்கள் - 24
- ★ லிங் - 450
- ★ ஐ. எம் ரவைகள் - 800
- ★ ஜே ஆர் குண்டு - 8
- ★ நீண்டவான் (07)

## கரையோரப் பகுதிகளை நோக்கி கலிபர், ஷெல், பீரங்கி தாக்குதல்

பூநகரி, கல்முனைப் பகுதிகளில இராணுவத்தினர் நேற்று அதிகாலையில் யாழ் நகரின் கரையோரப் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதலைமேற்கொண்டனர்

இதேவேளை நேற்று அதிகாலை மூன்று மணியளவில் யாழ் கடல் நீரேரிப்பகுதியை சுற்றி வட்டமிட்ட ஹெலிகப்டர் ஒன்று பரவலாக இப்பகுதியில் கலிபர் சூடுநடத்தியது.

கடலில் தரித்து நின்ற கடற்படையினரின் பீரங்கிப் படகுகளும் இடையிடையே பீரங்கித் தாக்குதலை நடத்தின. 07

## பஞ்சாப் தேர்தலின் போது 25 சதவீத வாக்குகளே பதிவு

பஞ்சாபில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல்களின் போது 25 சதவீதமான வாக்குகளே பதிவாகியுள்ளதாக இந்திய தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்தது.

பஞ்சாப்பில் குறைந்தது 30 சதவீத வாக்குகள் பதிவு செய்யப்பட்டால் அது பஞ்சாப் நிர்வாகத்திற்கு கிடைத்த வெற்றியாக இருக்கும் என இதுவரை கூறப்பட்டு வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சுதந்திரக்கட்சி எம். பி.

## 3000 படையினர் போரிட விரும்பாமலேயே விலகினர்

ஸ்ரீலங்கா இராணுவத்தில் இருந்து மூவாயிரம் பேர் பதவியை விட்டுச்சென்றுள்ளனர்.

இவ்வாறு கண்டி மாவட்ட சுதந்திரக்கட்சி எம் பி. டி எம். தயாரத்தினா பாராளுமன்றத்தில் நேற்று அவசரகாலச்சட்ட விவாதத்தில் பேசுகையில் கூறினார்.

வடக்கு கிழக்கு யுத்தத்தில் பணிபுரிய விருப்பம் இல்லாமலே இவர்கள் சென்றுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மூவாயிரம் பேரையும் மீண்டும் இராணுவத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனக்குறிப்பிட்ட அவர் இவர்கள் மீது அரசு பழிவாங்கக் கூடாது எனவும் சொன்னார்.

## இந்திரா காங்கிரஸ் பஞ்சாப்பில் தனித்தே அரசு அமைக்கும்

பஞ்சாப்பில் இந்திராகாங்கிரஸ அறுதிப்பெரும்பான்மை பலம் பெறும் அறிகுறிகள் இருப்பதால இம்மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் தனித்து நின்றே ஆட்சி அமைக்கும் என கட்சியின் பேச்சாளர் அறிவித்தார்

வேறு எந்த கட்சியுடனும் காங்கிரஸ் கூட்டுவைக்கவும் பவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்

சீக்கிய தீவிரவாதிகளின் மிரட்டலினால் பல கட்சிகள் பஞ்சாப்பில் போட்டியிட முன்வராத நிலையில் இந்திரா காங்கிரஸ் சுயநோக்குடன் தனது பெரும்பான்மையை உறுதிசெய்யவே பஞ்சாப் தேர்தலை இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் நடத்தியது எனக் குற்றஞ்சாட்டப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது

பாராளுமன்றத்தில் ஹட்சன்

## தமிழ் தீவிரவாதிகளின் உதவியை ஜே. வி. பியினர் பெற்றுள்ளனர்

அரசினால் ஒடுக்கப்பட்டதாக கூறும் ஜே வி. பி இயக்கத்தினரின் நடவடிக்கைகள் மீண்டும் நாட்டில் தலைதூக்கி வருகிறது என்று புதிய கொழும்பு மாவட்ட ஐ. தே. க. எம் பி. ஹட்சன் சமரசிங்கா பாராளுமன்றத்தில் நேற்று கூறினார்

இவர்கள் தமிழ்த் தீவிரவாதிகளின் உதவியுடன் செயல்படுகின்றனர் என்றும் அவர் சொன்னார்

அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட ஆயுதங்கள் இன்னமும்திருப்பி ஒப்படைக்கப்படவில்லை

இவற்றின் மூலம் ஆட்கடத்தல் போன்ற சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்றார்

## இலங்கை சி.ஐ.டி. குழு அவுஸ்திரேலியா செல்லுமாம

இவ்விரேலிடமிருந்து புலிகளுக்கு ஆயுதம் கொள்வனவு செய்ய அவுஸ்திரேலியாவிலுள்ள தமிழர்கள் முயன்றமை பற்றிய செய்தி குறித்த மேலதிகத்தகவல்களைத் தருமாறு இலங்கை இரகஸியப் பொலிஸார் சர்வதேசப் பொலிஸாரைக் கோரியுள்ளதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்

...04 ஆம் பக்கம் பார்க்க

இ. தொ. க. எம். பி.

## புலிகளுக்கும் சிங்கங்களுக்கும் மலையகத்தில் இடமில்லை

மலையகத்தில் புலிகள் பதுங்கவும் முடியாது சிங்கம் பாயவும் முடியாது என்று நுவரெலியா மாவட்ட இ. தொ. க எம். பி முத்து சிவலிங்கம் பாராளுமன்றத்தில் கூறினார்.

மலையகத்தில் பயங்கரவாதம் உருவாகியுள்ளது என்ற மாயையை எதிர்க்கட்சியினர் உருவாக்கிப்பார்க்கின்றனர்

வீண்புரளியைக் கிளப்பி மலையகத்தின் அமைதியைக்

—04 ஆம் பக்கம்பார்க்க

## தென்னிலங்கை பத்திரிகை மீது அமைச்சர் கண்டனம்

'ஐலண்ட், திவயின' போன்ற பத்திரிகைகள் இன்னமும் இனவாதத்தை தூண்டும் செய்திகளையே வெளியிடுகின்றன

இவ்வாறு இந்து சமய கலாசார ராஜாங்கஅமைச்சர்பி.பி. தேவராஜ் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்

இனக்குரோதங்களை வளர்த்து ஒரு அரசபதவியில் இருப்பது என்ற சித்தாந்

— 04 ஆம் பக்கம் பார்க்க

அஷ்ரப் மறுப்பு

## புலிகளுடன் எமக்கு தொடர்பில்லை

விடுதலைப் புலிகளுடன் எமக்குத் தொடர்பு இருப்பதாகக் கூறி அமைச்சர் ஒருவர் பொதுக் கூட்டம் ஒன்றில் எம்மைப்பற்றி விமர்சித்ததாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் பாராளு

—04 ஆம் பக்கம் பார்க்க

# காஷ்மீர் பகுதியில் இந்தியப் படைகள் மனித உரிமைகளை மீறுவதாக பாக். ஐ. நா. விடம் புகார்!

## அவதானிப்புக் குழுவையும் அனுப்பக் கோரிக்கை

இந்தியாவின் காஷ்மீர் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து பாக்கிஸ்தான் ஐக்கியநாடுகள் சபையிடம் புகார் தெரிவித்துளளது.

காஷ்மீர் பகுதியில் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து நேரில் அவதானிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை அவதானிப்புக் குழுவொன்றை இந்தியாவுக்கு அனுப்பவேண்டுமெனவும் பாகிஸ்தான் ஐ நா. பொதுச் செயலரைக் கோரியுள்ளது.

காஷ்மீர் தீவிரவாத இயக்கத்தைத் தனது பகுதியில் தடைசெய்யப் போவதாக பாகிஸ்தான் எச்சரித்துள்ள வேளையிலேயே ஐ நா. சபையிடமும் இந்தியாவுக்கு எதிராக இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானின் இந்த நடவடிக்கை இந்தியாவை ஆத்திரமடையச் செய்துள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

உள்நாட்டு விவகாரத்தில் பாகிஸ்தான் அனாவசியமாகத் தலையிடுகிறது எனப் புதுடில்லி இதுகுறித்து வெளியிட்ட பதிலறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ் மாவட்ட ஓய்வூதியர்க்கு 100ரூபா அதிகரிப்பு இம்மாதம் இல்லை

யாழ் மாவட்ட ஓய்வூதியக்காரர்களுக்கு கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 100 ரூபா அதிகரிப்போ, அதற்கான நிலுவையோ இம் மாதம் கிடைக்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 100 ரூபா அதிகரிப்புக் குறித்த சுற்று நிருபம் இங்கு தாமதமாகக் கிடைத்ததே இதற்குக் காரணமென செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மார்ச்மாத ஓய்வூதியத்துடன் இவர்களுக்கு இந்த அதிகரிப்பு நிலுவையுடன் சேர்ந்து 300 ரூபாவாக வழங்கப்படுமெனவும் அதன் பின்னர் மாதாந்தம் 100 ரூபா அதிகரிப்பு வழமையான ஓய்வூதியத்துடன் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## கருத்தரங்கு

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறும் வாராந்தக் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை, பண்பாட்டுக் கழக தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இவ்வார அமர்வில் திரு, சாந்தன் அவர்கள் "எழுத்துலகில் என் பாதை" என்ற பொருளில் கருத்துரையாற்றுவார்.

# பாகிஸ்தான் போர்விமானங்களுக்கு

## அமெரிக்கா உதிரிப்பாகங்களை வழங்கும்

பாகிஸ்தானுக்கான ஆயுத உதவித்தடை தொடர்கின்ற போதிலும் பாகிஸ்தான் விமானப்படையிலுள்ள 'எப்-16' ரகவிமானங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை வாங்குவதற்கு அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளது.

இந்த விமானங்களுக்குரிய உதிரிப்பாகங்களை வாங்குவதற்கு உதவி வழங்கவும் தயாராக இருப்பதாக வெள்ளைமாளிகை தற்பொழுது அறிவித்திருக்கிறது.

பாகிஸ்தான் தனித்து ஒதுக்கப்படுவதைத் தடுக்கும் நோக்குடனேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# கொழும்புப் பாடசாலைகளில் போலி ஆசிரியர்கள்! வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து சென்றவர்களாம்

வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற பலர் போலிக் காரணங்களைக் காட்டி கொழும்பிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் தற்காலிக ஆசிரிய நியமனங்களைப் பெற்றுள்ள விடயம் தற்போது அம்பலத்திற்கு வந்துள்ளது.

உடமைகள் அனைத்தையும் இழந்து விட்டோம் என்று பொய் கூறித் தம்மை இடம் பெயர்ந்த ஆசிரியர்களாகக் கருதுமாறு தெரிவித்து ஆசிரியர்களல்லாத இவர்கள் கொழும்பும் பாடசாலைகளில் தற்காலிக ஆசிரியர்களாகக் கடந்த ஒரு வருட காலமாகக் கடமை புரிந்து வருகின்றனராம்.

ஆசிரியர்களல்லாத இவர்கள் பொய்க் காரணங்களைக் கூறி, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமக்கு இவ்வாறு வேலை தேடிக் கொண்டுள்ள விடயம் தற்பொழுது அம்பலத்திற்கு வந்துள்ளதையடுத்து கல்வி அமைச்சு உஷாரடைந்துள்ளதாம்.

ஓம்

விராட் விஸ்வ பிரம்மனே நம

## ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்

## தம்பிப்பிள்ளை சண்முகலிங்கம்

(பத்தர்)

(நல்லூரைப் பிறப்பிடமாகவும் கைதடியை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

அன்னையின் மடியில் 20-03-1926 ஆண்டவன் அடியில் 13-02-1990

திதி: 21. 2. 1992

ஆருயிரே எம் அப்பா எனைக்காத்த அன்புருவே
ஆண்டிரண்டாய்க் கழிந்திடினும் எமதுள்ளம் கலங்குதையா
எமைக்காப்பாய் என்றிருந்தோம் இயற்கையுமோ பிரித்துவைத்தது
எம்துயரம் காணாயோ எப்பிறப்பில் இனிக்காண்போம்
ஈசனவன் உமக்கு சாந்திதர எப்போதுமருளவென இறைஞ்சி
உமையபணிந்து இறைஞ்சுகிறோம்.

"ஓம் அன்னை இல்லம்"
கைதடி கிழக்கு,
கைதடி.
02033

தங்கள் நினைவுடன் வாழும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

## மாணவர் கவனத்திற்கு

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்று தற்போது இடம்பெயர்ந்த நிலையில் வேறு பாடசாலையில் கல்வி கற்கும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 1992 ஆம் ஆண்டில் முதலாம் முறை தோற்றவுள்ளவரும், இரண்டாம் தடவை தோற்றவுள்ளவருமான சகல மாணவர்களும் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி கல்லூரி தற்போது யாழ் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இயங்குவது குறிப்பிடத்தக்கது.

## அன்னை திரேசா திரும்பினார்

ரோம் நகரில் மருத்துவமனை ஒன்றில் ஓய்வுபெற்றுக் கொண்டிருந்த அன்னை திரேசா அவர்கள் நேற்று இந்தியா திரும்பினார்.

எண்பத்தொரு வயதான அன்னை திரேசா அவர்கள் சென்ற டிசம்பர் மாதம் மெக்சிக்கோ சென்றபோது மாரடைப்பு ஏற்பட்டுக் கலிபோர்னியாவில் அறுவைச் சிகிச்சை பெற்றார்.

## சிறுவிளம்பரம்

### கல்வி

பாலர் ஆசிரியர் பயிற்சி பெறலாம். க. பொ. த (சா / த) கடைசித் தகைமையாகும். நேரில் வர முடியாதோர் தபால்வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா உயர்கலைக் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி - யாழ்ப்பாணம். 02037

## யாழ்ப்பாண மாநகரசபை

# கூறுவிலை அறிவித்தல்

கீழ்க்காணும் பொருட்களுக்குரிய கூறுவிலைகள் அவற்றின் விநியோகஸ்தர்களிடம் இருந்து எதிர்வரும் 10. 03. 1992 ஆம் திகதி பிற்பகல் 3. 00 மணிவரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கண்டகல் (6"—9") கியூப் ஒன்றிற்கு
2. கிறசர் சல்லி (கையால் உடைத்தது) 1/2" — 3/4" கியூப் ஒன்றிற்கு
3. கிறசர் சல்லி (கையால் உடைத்தது) 1½"—2" கியூப் ஒன்றிற்கு
5. ஊரிமணல் கியூப் ஒன்றிற்கு

### கூறுவிலைகள்

1. மேற்குறித்த பொருட்களை மாநகரசபை அலுவலக வளவில் விநியோகிப்பதற்கான போக்குவரத்துச் செலவை உள்ளடக்கியும்,
2. தமது களஞ்சியத்திலிருந்து அவற்றினை மாநகர சபை பெறறுக்கொள்ளுமிடத்து அவற்றின் விலையையும் தனித்தனியே குறிப்பதுடன், விலைகள் ஆகக்குறைந்தது 3 மாதங்கள் வரை அமுலிலிருக்கக் கூடியனவாகவும் இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகர சபையின் வேலைப் பகுதிப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
19 02. 1992.

02041

# குவைத்நாட்டு இராணுவத்துக்கு இந்திய ஆயுதங்கள், பயிற்சி!

குவைத் நாடு இந்தியாவிடமிருந்து இராணுவத் தளபாடங்களை வாங்கவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் போர்க்கவச வண்டிகள், நடுத்தர ஆயுதங்கள், தரையிலிருந்து விண்ணுக்கு ஏவும் ஏவுகணைகளுக்கான பற்றறிகள், இராணுவ வாகனங்கள் என்பவற்றையும் குவைத் இந்தியாவிடமிருந்து வாங்கவுள்ளது.

இது குறித்துப் பேச்சு நடாத்தவெனக் குவைத் அதிகாரிகள் குழுவொன்று விரைவில் புதுடில்லி வரவுள்ளது.

அத்துடன் குவைத் இராணுவத்துக்கு சில துறைகளில் பயிற்சி வழங்கவும் இந்தியா முன்வந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

## இந்தியத் தொழிலாளர்களுக்கு குவைத்தில் அதிக தொழில்வாய்ப்பு

இந்தியத் தொழிலாளர்களுக்கு அதிகளவு வேலை வாய்ப்பை வழங்க குவைத் இணங்கியுள்ளது.

இந்திய மத்திய அமைச்சர் ஸோலங்கி குழுவினரின் குவைத் விஜயத்தின் பின்னர் இந்தத் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

தற்போது குவைத்தில் 70 ஆயிரம் இந்தியத் தொழிலாளர்கள் உள்ளனர் இவர்களின் தொகை விரைவில் அதிகரிக்கப்படவுள்ளது,

# தெற்கு லெபனான் மீது இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதல்

தெற்கு லெபனானில் ஷியா முஸ்லிம் படையினரின் தளங்களை இஸ்ரேலிய ஜெற் விமானங்கள் நேற்று முன்தினம் பலமாகத் தாக்கியதாக அறிவிக்கப்படுகின்றது.

வடக்கு இஸ்ரேலில் இராணுவ முகாமொன்றில் மூன்று இஸ்ரேலியர்களை ஞாயிற்றுக்கிழமையன்று பாலஸ்தீன கெரில்லாக்கள் கொலை செய்த பின்னர் இது இஸ்ரேலின் ஐந்தாவது வான் வழித் தாக்குதலாகும்.

## தேசிய பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படும்!

சாதாரண பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்களை தேசிய பாடசாலைகளுக்கு இடமாற்றுவதற்கு கல்விச் சேவைகள் ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள தேசிய பாடசாலைகளில் பல வெற்றிடங்கள் உள்ளதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் இம் மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தேசிய பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களின் இடங்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## வர்த்தகர் மரணம்

சைக்கிள் ரயர் ஏற்றிக் கொண்டு சென்ற வர்த்தகரின் மோட்டார்சைக்கிள் மரம் ஒன்றுடன் மோதியதால் கச்சாய் வீதியைச் சேர்ந்த கந்தசாமி என்பவர் யாழ் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் வழியில் மரணமான சம்பவம் கொம்படி வெளி அருகில் இடம்பெற்றது.

## 20வருடத்தில் 5000கோடிரூபாநஷ்டம்

தனியார் தோட்டங்களை அரசுடமையாக்கியதால் 20 வருடங்களில் அரசு 5000 கோடி ரூபா நஷ்டமடைந்துள்ளதாகப் பிரதமர் டி. பி. விஜயதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அரசு இந்த வகையில் நஷ்டமடைவதைத் தடுக்கவே தோட்ட நிர்வாகங்களைப் பரவலாக்கத் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# 'சிங்களப் பகுதி அரசியல் வாழ்வை இனத்துவேசம் ஆட்டிப்படைக்கிறது'

"அன்றொரு காலம் சித்தாந்த விஷமாக பௌத்த வேதாகமங்களில் புகுந்து கொண்ட பேரினவாதம், இன்று சிங்களமக்களது தேசிய வாழ்வின் சகல பரிமாணங்களிலும் வேரூன்றி வியாபித்து நிற்கிறது பண்பாட்டுக் கோலங்களில் ஊடுருவி நிற்கிறது. மதம், கல்வி, அரசியல் என்ற ரீதியில் நிறுவனமயம் பெற்றிருக்கிறது. சிங்கள தேசத்துச் சமூக, அரசியல் வாழ்வை ஆட்டிப்படைக்கும் சக்தியாக பூதாகார வடிவம் எடுத்திருக்கிறது."

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏட்டின் ஆசிரியத் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"நாம் எமது உரிமைகளைப் போராடித்தான் வென்றெடுக்க வேண்டும். சிங்கள இனவாத அரசியல் எமக்குச் சதா புகட்டி வரும் பாடமும் இதுதான்" என்றும் கூறப்பட்டுள்ளது

தற்பொழுது வெளிவந்துள்ள 1992 மாசி மாதத்திற்கான இந்த "விடுதலைப்புலிகள்" குரல் 28 இல் பூங்குன்றனின் கவிதைகள், தனியார் கல்வி நிறுவனங்களும், பாடசாலைகளும், சிறிலங்காவின் இராணுவ இயந்திரமும், தமிழீழ விடுதலைப் போராட்டமும், உளவாளிகள், எப்படி உருவாகுகின்றார்கள் உருவாக்கப்படுகின்றார்கள் முதலான கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

## தங்க விற்பனைத் தடையை ஜேர்மன் நீக்குகிறது!

தங்கம், இரும்பு மற்றும் உலோகப் பொருள்களை தென்னாபிரிக்காவிற்கு வழங்குவதற்கு இருந்த தடையை ஜேர்மன் நீக்கியுள்ளது.

எனினும் தென்னாபிரிக்காவுக்கான ஆயுத விற்பனைத் தடை தொடர்ந்தும் அமுல்படுத்தப்படுமென ஜேர்மன் அறிவித்துள்ளது.

## வைத்தியர்கள் கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்துக்கு உட்பட்ட சித்த, ஆயுர்வேத, யுனானி, ஹோமியோபதி வைத்தியர்கள், மாகாண சபை மருத்துவப் பிரிவுப் பிரதிப் பணிப்பாளருடன் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

## உள்ளூர் உணவை விரும்பி உண்ட 101 வயது மூதாட்டி மரணம்

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட யோவசம்பிள்ளை ஞானபிரகாசி என்ற மூதாட்டி தனது 101 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

இறுதிவரை சுகதேகியாகவே வாழ்ந்து வந்த இவர் உள்ளூர் உற்பத்தி உணவுகளிலேயே மிக நாட்டம் கொண்டிருந்தார்.

ஆறு பிள்ளைகளுக்கு அன்னையான இவருக்கு 27 பேரப் பிள்ளைகளும் வழிவழியாகப் பூட்டப் பிள்ளைகள், கொப்பாட்டப் பிள்ளைகளாக 149 குடும்ப அங்கத்தவர்கள் உள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (16)

அரசியல் அவதானிப்புகள்:

## பாரதம் செய்யாததும் பாகிஸ்தான் செய்வதும்

- எஸ். ஜி. எம்.

"எந்த ஒரு பெரும்பான்மைத் தேசிய இனமும், சிறுபான்மைத் தேசிய இனத்தை ஒதுக்கினால் அதிலிருந்து விடுதலை பெறும் உரிமை அச்சிறுபான்மைத் தேசிய இனத்திற்கு உண்டு. இதற்கேற்ப சிறுபான்மையினரான தமிழ்த் தேசிய இனம் சுய நிர்ணய உரிமையைக் கொண்டுள்ளது" என்று லண்டனில் அண்மையில் கூடிய சர்வதேச தமிழ்ப் பேரவை சுட்டிக் காட்டியுள்ளது.

1952 ஆம் ஆண்டிலிருந்தே ஜனநாயக வழியிலும், ஆயுதப் போராட்டங்கள் மூலமும் தமிழீழ மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்படியே போராடி வந்துள்ளனர்.

தமிழீழ மக்களின் உரிமைகளில் அக்கறை கொண்டுள்ளதாகக் காட்டிக் கொண்ட இந்தியா தமிழீழப் போராட்டத்தில் ஊடுருவுவதன் மூலம் தனது நலன்களை நிலை நிறுத்தவே முயன்றது.

தமிழ் மக்கள் நலன்களுக்காக எனக் கூறிக் கொண்டு சிறிலங்கா அரசுடன் இந்தியா செய்து கொண்ட 1987 ஜூலை 29 ஆம் திகதிய ஒப்பந்தம் தமிழீழ மக்களின் ஒப்புதலின்றியும், இணக்கமின்றியும், சம்பந்தமின்றியும் செய்யப்பட்டது

இதனால் தமிழீழ மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை இந்தியா மழுங்கடித்தது மட்டுமல்ல தமிழீழத் தாயகத்தை மீண்டும் பிரிக்கக் கூடிய வகையில் கிழக்கில் மட்டும் சர்வஜன வாக்கெடுப்புத் தீர்மானத்திற்கு ஒப்பந்தத்தில் ஏற்பாடு செய்தது.

உலகத் தமிழினத்தின் தாயகமான தமிழ்நாட்டைத் தனது மாநிலங்களில் ஒன்றாகக் கொண்ட இந்திய அரசு ஈழத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை முறியடித்தது.

ஆனால் இந்திய நாட்டின் இன்னுமொரு எல்லையில் உள்ள ஒரேயொரு முஸ்லிம் பெரும்பான்மை மாநிலமான ஜம்மு - காஷ்மீரின் விடுதலைக்காகப் பாகிஸ்தான் இந்தியாவுடன் இரண்டு யுத்தங்களில் ஈடுபட்டது மட்டுமல்ல தொடர்ந்தும் ஆதரவு அளித்து வருகிறது.

1948 ஆம் ஆண்டு யுத்தத்தில் காஷ்மீரின் மூன்றிலொரு பகுதியைப் பிடித்துக் கொண்ட பாகிஸ்தான் மிகுதி மூன்றில் இரண்டு பகுதியில் வாழும் மக்கள் இந்தியாவுடன் இணைந்திருப்பதா அல்லது பாகிஸ்தானுடன் இணைந்திருப்பதா என்பதைத் தீர்மானிக்க ஐக்கிய நாடுகள் சபைத் தீர்மானத்துக்கமைய மக்கள் கருத்துக் கணிப்பு (Plebiscite) நடாத்த வேண்டுமென வலியுறுத்தி வந்தது.

காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்திருக்க வேண்டுமென பாரூக் அப்துல்லா தலைமையிலான தேசிய மாநாட்டுக் கட்சி வாதிட்ட அதேவேளை பாகிஸ்தானுடன் இணைய வேண்டுமென வேறு பல அமைப்புகள் போராடின.

கடந்த வாரம் கட்டுப்பாட்டு எல்லையைக் கடக்க முயன்ற ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி (ஜே. கே. எல் எவ்) காஷ்மீர் சுதந்திரத் தனி நாடாக இருக்க வேண்டுமெனப் போராடுகின்றது.

சென்ற வாரம் காஷ்மீர் நிலைமை பற்றிக் கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் சரிவ் காஷ்மீரியர்களுக்கு சுய நிர்ணய உரிமையை இந்தியா வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதுடன் முழுப் பிராந்தியத்துக்குமான சுதந்திரத்தைத் தமது அரசு நிராகரிக்கவில்லையெனவும் கூறியுள்ளார்,

பல காலமாகக் காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணைய வேண்டுமெனக் குரல் கொடுத்த பாகிஸ்தான் காஷ்மீரிய மக்களின் அபிலாஷைகளையும், அக்கறையையும் கருத்திற் கொண்டு அவர்களுக்கான சுய நிர்ணய உரிமையை வழங்க வற்புறுத்துவதுடன், காஷ்மீர் சுதந்திரத் தனி நாடாவதையும் வரவேற்றுள்ளது.

இதற்கு மாறாக இந்தியாவோ தமிழீழ மக்களின் சுய நிர்ணய உரிமையையும், சுதந்திர விடுதலைப் போராட்டத்தையும் முறியடிப்பதிலும், நசுக்குவதிலுமே தொடர்ந்து அக்கறை காட்டிச் செயற்பட்டு வருவதை வருத்தத்தோடு கவனிக்க வேண்டியுள்ளது.

## வெளியூர்களிலும் எயர்லங்காவின் ரிக்கெற் விற்பனை நிலையங்கள்

எயர்லங்கா நிறுவனத்தின் ரிக்கெற் விற்பனை நிலையமொன்று முதற்தடவையாக கொழும்புக்கு வெளியே கண்டியில் இம்மாதம் 28ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இதேபோன்று எயர்லங்காவின் பிராந்திய விற்பனை நிலையங்கள் இவ்வருட இறுதிக்குள் காலி, மாத்தறை, அனுராதபுரம் ஆகிய பகுதிகளிலும் திறந்து வைக்கப்படவுள்ளன

எயர்லங்கா விமானத்தில் வெளிநாடுகளுக்குச் செல்வோர் [illegible] அலுவலகங்களில் அதற் [illegible] ற்றுக்களை இனி [illegible].

கும்பகோண விபத்தை

# ஜெயலலிதாவுடன் தொடர்பு படுத்த வேண்டாமாம்

மாசிமக தினத்தன்று கும்பகோணத்தில் நடைபெற்ற விபத்தைத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் விஜயத்துடன் தொடர்பு படுத்துவதற்கு தமிழக அரசு நேற்றுக் கண்டனம் வெளியிட்டது.

இம் மதவைபவம் தொடர்பாக தமிழக அரசு சரியான பாதுகாப்பு ஒழுங்குகளையே வழங்கியிருந்தது. சுமார் 12, 070 பொலிஸார் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

முதலமைச்சர் ஜெயலலிதா குடிமக்களில் ஒருவர் என்றே கும்பகோணத்தில் நீராட வந்தார் இதைத் தவறாகப் புரிந்துகொண்டு ஜெயலலிதாவை பாதுகாக்க பொலிஸார் மேற்கொண்ட தடியடியில் சனநெரிசல் ஏற்பட்டே பலர் பலியானதாக வெளியிடப்படும் செய்திகள் கண்டிக்கப்படவேண்டியவை என தமிழக அரசு நேற்றுத் தெரிவித்தது

கடந்த காலங்களிலும் கும்பகோணத்தில் நடைபெற்ற மாசிமக கும்பமேளா வைபவத்தில் நெரிசலில் சிக்கி பலர் உயிரிழந்ததுண்டு எனவும் தமிழக அரசு சுட்டிக் காட்டியது.

ஜெயலலிதாவின் விஜயத்தினால் ஏற்பட்ட நெரிசலிலேயே பொதுமக்கள் பலியானதாக பல தமிழக எதிர்க் கட்சிகள் கண்டனம் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

# உடற் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம். கிளிநொச்சி பிராந்தியங்களுக்கான உடற் பயிற்சிநெறி பயிற்சிக்கான விண்ணபபங்கள் உடற்பயிற்சி பெற்ற நிரந்தர ஆசிரியர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

யாழ் இந்துக் கல்லூரியில் உள்ள தொலைக்கல்வி நிலையத்தில் இம்மாதம் 22 ஆம், 23 ஆம் திகதிகளில் இவ் விண்ணப்பப் படிவங்களைப்பெற்று விண்ணப்பிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

# அவுஸ்திரேலிய புலமைப்பரிசில்; பரீட்சைமூலம் தெரிவு இடம்பெறும்

அவுஸ்திரேலியாவில் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் தற்பொழுது கோரப்பட்டுள்ளன.

இலங்கை மாணவர்களுக்கு புதிய திட்டமொன்றின் கீழ் இந்த புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. மும்மொழி மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். போட்டிப் பரீட்சை மூலமே தெரிவு இடம் பெறும். எனினும் தகுதி பெற்ற வறிய மாணவர்களுக்கென குறிப்பிட்ட இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பெண்களுக்கு அரைவாசி இடங்கள் வழங்கப்படும்.

# 114 தீவக மக்கள் கப்பலில் தீவுப்பகுதிக்குத் திரும்பினர்

நேற்று அதிகாலை 5 மணியளவில் குமண கப்பலில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினரின் உதவியுடன் 114 பொதுமக்கள் தீவுப்பகுதிக்கு சென்றுள்ளனர்

இன்று காலை 100 க்கும் மேற்பட்ட தீவுப் பகுதிகளை சேர்ந்த பொதுமக்களை குமண கப்பல் மீண்டும் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்ததும் ஏற்றிச் செல்ல இருப்பதாக செஞ்சிலுவைச்சங்க வட்டாரங்களில் இருந்து அறியவந்தது 47, 07

இந்திய இராணுவம் புரிந்த கொடூரம்

# பயணிகள் கொலை மணப்பெண் மானபங்கம்

திருமணம் முடிப்பதற்கு உறவினருடன் பஸ்ஸில் சென்ற மணமகனும், மணமகளும், அவர்களது உறவினர்களும் இந்திய இராணுவத்தினால் கண்மூடித்தனமாகச் சுடப்பட்டு உயிர் தப்பிய மணமகளும், வேறுசில பெண்களும் இராணுவத்தினால் கற்பழிக்கப்பட்ட சம்பவம் காஷ்மீரில் நிகழ்ந்துள்ளது

இச்சம்பவம்பற்றி வாக்கு மூலம் அளித்த 18வயதுடைய மூபினாகானி என்ற மணப் பெண்தான் இறந்துவிட்டது போல் பாசாங்கு செய்து பஸ்சீற்றுக்கு அடியில் படுத்திருந்த போது இராணுவத்தினர் வெளியே இழுத்துப் பல முறை கற்பழித்ததாகக் கூறினார்

இச்சம்பவத்தை விசாரித்த பொலிஸ் உயர் அதிகாரி இராணுவத்தினர் இந்த வன்முறையில் ஈடுபட்டதைஒப்புக்கொண்டுள்ளார்

சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் தண்டிக்கப்படுவர் எனக் கூறப்பட்டும் இதுவரை அவர்கள் தண்டிக்கப்படவில்லையென ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

# தேசத்துரோகிகள் நேற்றும் மக்கள் முன் நிறுத்தப்பட்டனர்

விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்ட தேசத்துரோகிகள் நால்வரையும் மக்கள் முன் பகிரங்கப்படுத்துவதற்காக நேற்று இரண்டாவது நாளாகவும் யாழ் குடாவின் பல பாகங்களில் மக்கள் முன் நிறுத்தப்பட்டிருந்தனர் சாவகச்சேரி நெல்லியடி, ஆவரங்கால் போன்ற பகுதிகளிலே வைக்கப்பட்டிருந்தனர்

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் இவர்கள் செய்த தேசத்துரோகங்களை மக்கள் முன் அம்பலப்படுத்தினார்கள்

பெருந்திரளான மக்கள் இப்பகுதிகளில் வந்து பார்த்தபடியிருந்தனர் 47-07

# கிளிநொச்சி மாவட்டத்தில் மலேரியா தீவிரமாகிறது

கிளிநொச்சி நகர், மற்றும் கிராமப்புறங்களில் மலேரியா நோய் தீவிரமாகப்பரவி வருகிறது.

இதனால் கிளிநொச்சி பொது மருத்துவ மனையில் தினமும் மலேரியா நோயாளர் தொகை அதிகரித்துக் காணப்படுகிறது.

பல நோயாளருக்குஇரத்தப் பரிசோதனை செய்த பின்னர் 'மலேரியா இல்லை' என்று ஆஸ்பத்திரியில் தெரிவிக்கப் பட்டு, அவர்கள் வீடு திரும்பியும் மறுபடியும் மலேரியா நோயினால் பிடிக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்கு வருகின்றனர்

ஆஸ்பத்திரியில் வழங்கப் படும் மலேரியா நோய்க்கான மருந்துகளைநோயாளர் ஒழுங்காகப் பாவிக்காததும் நோய் மீண்டும் வரக்காரணம் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. 17

## கொழும்பு செல்லும் நோயாளர்க்கு

கொழும்பு நோக்கி குமண செல்லவிருப்பதால் கொழும்பு சென்று சிகிச்சை பெறுவதற்காக யாழ் பொதுமருத்துவமனை வைத்திய நிபுணர்களால் பதிவு செய்யப்பட்ட 40 நோயாளர்களும் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 6மணிக்கு இவ் வைத்திய சாலைக்கு சமுகம் தரும்படி மருத்துவமனைப் பணிப்பாளர் கேட்டுள்ளார் 47-07

## முத்திரைகள் வந்தன

யாழ் பிரதம தபாலகத்துக்கென முத்திரைகள், வான்கடிதங்கள் என்பன வந்து சேர்ந்துள்ளன.

நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்ட தபால் பொதிகளில் இவ் முத்திரை வகைகளும் இருந்ததாக தபால வட்டாரம் தெரிவித்தது 47. 06

## குழந்தையும் தாயும் தடுத்துவைப்பு

கொழும்பிலிருந்து வந்த பெண்மணியொருவர் அவரது குழந்தையுடன் தாண்டிக்குளம் தடை முகாமில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இப் பெண்மணி அவரது குழந்தையின் சட்டையினுள் சைக்கிள் போல்ஸ் கடத்தி வந்தது தடை முகாம் சோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்டதையடுத்தே அப் பெண்மணி குழந்தையுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளாராம். 14

இலங்கை...

டுள்ளது.

இது குறித்து சர்வதேசப் பொலிஸாரின் தகவல் கிடைத்ததும் இலங்கை இரகசியப் பொலிஸ்குழுவொன்று விரைவில் அவுஸ்திரேலியாவுக்குச் சென்று அங்கு விசாரணைகளை மேற்கொள்ளுமெனவும் இப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளுடன்...

மன்றத்தில நேற்றுக் கூறினார்

தமக்கும் புலிகளுக்கும் இடையில் தொடர்பு இல்லை எனக் கூறிய அவர் அண்மையில் புத்தளத்தில் இருந்து புதிது முஸ்லிம்கள் ஆயுதப் படையினரால் கைது செய்யப் பட்டுள்ளதாகவும் ஆனால் இதுவரை அவர்கள் விடுவிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

தென்னிலங்கை...

தை இனியாவது அரசியல் கட்சிகள் கைவிடவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்

ஐ.தே கவும், சுதந்திரக் கட்சியும் சேர்ந்து இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கொண்டுவரவேண்டும்

1956முதல் பேசப்பட்டு வரும் இனவாதத்தைப் போக்கி பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்றார்

இஸ்ரேல் படையினர் சுட்டதில்

# ஐ.நா. அமைதிப் படையினர் காயமுற்றனர்

தெற்கு லெபனானிலுள்ள கிளர்ச்சிக் குழுவினருடன் இஸ்ரேல் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியவேளை ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படையில் இருவர் காயமுற்றதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இஸ்ரேல் இராணுவத்தினர் தமது பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியே வந்து தெற்கு லெபனான் பகுதிகளுக்குச் சென்று முஸ்லிம் கிளர்ச்சியாளர்களை நோக்கி தாக்குதல் நடத்தினர் இவ் வேளையிலேயே அமைதிப் படையினர் காயமுற்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெனிவா பிரதிநிதி

# சுமுக நிலை ஏற்படுத்த செஞ்சிலுவை முயற்சிக்கும்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இன்றைய காலகட்டத்தில் யாழ் குடாநாட்டில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பல் வேறு உதவிகளைச் செய்து வருகிறது

இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஜெனிவா பிரதிநிதி ஹென்றி ஆர்னி நேற்று யாழ் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கூறினார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அரசுடனும், விடுதலைப் புலிகளுடனும் தொடர்பு கொண்டு இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சுமுகமான தீர்வை ஏற்படுத்த முயற்சி செய்து வருவதாகவும் அவர் மேலும் சொன்னார். (06)

# பஞ்சாப் கட்சி நிலைவரம்

தேர்தல் நடைபெற்ற சட்டப்பேரவை தொகுதிகள் -117

முடிவுகள் வெளியானவை-79

இந்திராகாங்கிரஸ்- 59

பகுஜன் கட்சி - 06

இந்திய கம்யூனிஸ்ட் - 03

மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் - 01

அகாலிதள் காபூல் பிரிவு - 03

சுயேட்சைகள் - 03

பாரதிய ஜனதா கட்சி - 03

இதேவேளை பஞ்சாப் பாராளுமன்ற தொகுதிகளின் நான்கு இடங்களில் இந்திரா காங்கிரஸ் முன்னணியில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

2 ஆம் உலகப் போருக்குப்பின்

# ஈராக்கிலேயே படுகொலைகள் அதிகரித்துள்ளன

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் ஈராக்கிலேயே மனிதப் படுகொலைகள் அதிகமாகக் காணப்படுவதாக ஐ.நா வின் சிறப்பு அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

பலாத்காரமாகக் கைது செய்தல், சித்திரவதைக்குள்ளாக்குதல், தொகை தொகையாகக் கொலை செய்தல் என்பன சாதாரண சம்பவங்களாகிவிட்டதாக அந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

குர்டிஷ் மக்கள் மீது இரசாயன ஆயுதங்களைப் பாவித்தல், கொடூரத் தாக்குதலை மேற்கொள்ளுதல் என்பன அங்கு நடக்கின்றன எனத் தெரிவித்த அறிக்கை. உடனடியாக மனித உரிமைக் கண்காணிப்பாளர்கள் ஈராக்குக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டியுள்ளது. எனினும் ஈராக் பிரதிநிதி இதனை மறுத்துள்ளார்.

கிளிநொச்சிப் பகுதியில்

# தனியார் கடைகளில் உணவுப்பொருள் விலை குறைவு

கிளிநொச்சிப் பகுதியில் தனியார் கடைகளில் உணவுப் பொருட்களின் விலை குறைந்துள்ள போதிலும், கூட்டுறவுக் கடைகளில் இவற்றின் விலை குறையவில்லை

இதனால் தனியார் கடைகளில் நுகர்வோரின் தொகை அதிகரித்துள்ளது.

இதேபோல கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட உழுந்து, கௌபி, பயறு போன்ற உப உணவுப் பொருள்களை விட கிளிநொச்சிப் பகுதியில் உற்பத்தியான இந்த உப உணவுப் பொருள்கள் விலை குறைவாக விற்கப்படுகின்றன. (17)

புலிகளுக்கும்...

குளப்ப வேண்டாம். எனவும் அவர் மேலும் சொன்னார்.

எமது மக்கள் கஷ்டப்படுவதை நாம் விரும்பவில்லை என அவர் குறிப்பிட்டார்.

குருநகரில்...

கள் பார்வையிட்டனர்.

ஒரு சிப்பாயின் தலை, முகம் முற்றாகச் சிதறிய நிலையில் காணப்பட்டிருந்தது.

டிரக்வண்டி மீதே நான்கு உடலங்களும் வைக்கப்பட்டிருந்தன, (07, 47)

## மூலவள நிலையம்

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப்பிரிவில் விளையாட்டு உபகரணங்களை உள்ளடக்கிய மூலவள நிலையம் ஒன்று வெகு விரைவில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது. 18

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தின[...]கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்ச[...]-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது